109—

ஜவுளிப் பூங்கா

***6740—திரு. S. சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, R.K. பேட்டை வட்டத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, R.K. பேட்டை வட்டத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்றத் தொகுதியில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்கள் உள்ளன. இத்தொகுதியில் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களும், விசைத்தறி நெசவாளர் சங்கங்களும் மற்றும் ஆயிரக்கணக்கான பெடல் தறி நெசவாளர் சங்கங்களும் உள்ளன. ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய, பெரிய துணிநூல் கம்பெனிகளும் இந்தத் தொகுதியில் உள்ளன. இங்கு சுடிதார், லுங்கி, வேட்டி, சேலை போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழக அரசின் இலவச வேட்டி-சேலை உற்பத்தித் திட்டத்தில் இத்தொகுதி கணிசமான பங்கை வகிக்கின்றது. எனவே, நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜவுளிப் பூங்காவை இந்தத் தொகுதியில் அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, R.K. பேட்டை வட்டத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டுமென்று திரு. சந்திரன் அவர்கள் கேட்டிருக்கிறார். அவரைவிட நான்தான் அதிகமாக அக்கறைக் கொண்டவன். நான், அந்த R.K. பேட்டை ஒன்றியத்தில் பிறந்தவன். அதுமட்டுமல்லாமல், அரக்கோணம் பாராளுமன்ற உறுப்பினர், மாண்புமிகு முன்னாள் மத்திய இணை அமைச்சர் டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களும் ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி, எப்படியாவது அங்கே ஜவுளிப் பூங்கா வருவதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்வேன் என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.

திரு. S. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ராணிப்பேட்டை மாவட்டம் அவருடைய புகுந்த வீடாக இருந்தாலும், திருத்தணி சட்டமன்றத் தொகுதி அவருடைய தாய்வீடு. அவர் ராணிப்பேட்டை மாவட்டத்திற்கு, புகுந்த வீட்டிற்கு ஏராளமான சீதனங்களை இவ்வளவு காலம் கொடுத்திருப்பார். ஆனால், தாய்வீட்டுச் சீதனமாக இதுவரை எதுவும் கொடுக்கக்கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைக்கப்பெறவில்லை. எனவே, இந்த நல்ல வாய்ப்பினைப் பயன்படுத்தி, அவர் தாய்வீட்டுச் சீதனமாக ஜவுளிப் பூங்காவைத் தொகுதி மக்களுக்கு அளிப்பார் என்கின்ற நம்பிக்கையில் தொகுதி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். தொகுதி மக்களுடைய எதிர்பார்ப்பான தாய்வீட்டுச் சீதனத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, நிச்சயமாக நிறைவேற்றுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

முற்பகல் 10–50

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் விசைத்தறி மற்றும் கைத்தறித் தொழில் நிறைந்துள்ள பகுதிகளாக இருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், எங்கள் தலைவர் அவர்கள் சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த ஜவுளிப் பூங்காவை இந்த ஆண்டே தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்குத் தேவையான நிலத்தைத் தேடிக்கொண்டிருக்கிறோம். நிலம் கிடைத்தவுடன் நிச்சயமாக அங்கே ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

மேல்நிலைப் பள்ளி

***7552—திரு. ஜோசப் சாமுவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் தொகுதியில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அந்நெறிமுறைகளின்படி ஏற்கெனவே செயல்பட்டுவரும் உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். எனவே, அம்பத்தூர் தொகுதியில் நேரடியாக